முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

O.S. No.31/2021 தேதி 29.01.2025

வாதி தரப்பு சாட்சி – (பன்னீர்செல்வம், த/பெ. சக்கரபாணி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. வழக்கு ஏக்கர் 1.55 செண்ட் நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். வரப்பை வெட்டி பிரதிவாதிகள் அவ்வப்போது தொந்தரவு தருவதால் 4 எல்லை அத்துக்காட்டி கல்போட்டு தரவேண்டும். வழக்கு சொத்தின் சர்வே எண்.36/5, 36/3 மற்றும் 36/2. அதற்கு சக்குபந்தி ரோட்டிற்கு வடக்கு, காசிநாதன், கோதண்டபாணி பத்தர் நிலத்திற்கு தெற்கு, தங்கராசு நிலத்திற்கு மேற்கு, சாவித்திரி நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் ஏக்கர் 1.55 செண்ட் விஸ்தீரணம். கிழக்கு பக்கத்தில் உள்ள சாவித்திரியிடமிருந்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவர்களது ஏக்கர் 1.04 செண்டை கிரையம் பெற்ற நாள்முதல் தொந்தரவு செய்கிறார்கள்.
2. இதர 3 பக்கத்து நிலத்துக்காரர்கள் என்னை எந்த தொந்தரவும் செய்யவில்லை அதனால் அவர்களை வழக்கு தரப்பினராக சேர்க்கவில்லை. இதர பக்கத்துக்காரர்கள் எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் அளந்தால்தான் எனக்கு தெரியும். மற்ற 3 நிலத்துக்காரர்களும் நிலத்தை அளவீடு செய்ய எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. இதர பக்கத்து நிலத்துக்காரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய அருகமானது என்றால் சரியல்ல, அவர்கள் எந்த இடையூறும் நாளது தேதிவரை செய்யவில்லை. எனினும் அளந்தால் தான் தெரியும்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.